# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பெர்லினிலுள்ள கதீஜா பள்ளிவாயிலில் 01.07.2011 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் அல் பக்கராவின் 153வது வசனத்தை ஓதினார்கள்:**

*பொருள் : எனவே என்னை நினைவு கூறுங்கள். நானும் உங்களை நினைவு கூறுவேன். எனக்கு நன்றி செலுத்துங்கள். நன்றி கெட்டவராகி விடாதீர்கள். (2:153)*

அல்ஹம்துலில்லாஹ்! கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜெர்மனியின் ஆண்டு மாநாடு தமது நிறைவை அடைந்தது. இம்முறை புதிய இடத்தில் மாநாட்டை நடத்திய காரணத்தால் ஜெர்மனி அஹ்மதிய்யா ஜமாஅத் மற்றும் அமீர் சாஹிப் அவர்களுக்கு புத்துணர்ச்சியும் உற்சாகமும் இருந்தது. ஒரு புதிய எழுச்சி மிகுந்த உணர்வை வெளிப்படுத்தினர். இந்த உணர்வு நிச்சயமாக ஜமாஅத்தின் பிற உறுப்பினர்களுக்கும் இருந்திருக்கும். ஏனென்றால் மான்ஹேம் என்ற இடத்தில் இருந்த பழைய மாநாட்டுத் திடலில் ஒரேயொரு பெரிய அரங்கம் மட்டுமே இருந்தது. அது கூட்டத்திற்குப் போதுமானதாக இல்லை. பெண்களுக்காக பெரிய கூடாரம் அமைக்க வேண்டியதிருந்தது. வெயில் காலத்தில் அதில் அமர்வது மிகவும் கடினமாக இருந்தது. குறிப்பாக குழந்தைகளைக் கொண்ட பெண்களுக்கு அது மிகவும் சிரமமாக இருந்தது. ஆனால் இந்த புதிய மாநாட்டுத் திடலில் பெரிய விரிவான அறைகளும் குளிர்சாதன வசதியுடன் கிடைத்தது. இது தவிர இன்னும் சில சௌகரியங்களும் கிடைத்தன. எனவே இந்த சௌகரியங்கள் கிடைத்ததால் மகிழ்ச்சியும் (excitment) உற்சாகமும் ஏற்பட்டது இயல்பான ஒன்றாகும். ஆனால் ஒரு புதிய இடமாக இருந்ததாலும் ஒரே கூரையின் கீழ் எல்லா ஏற்பாடுகளும் இருந்ததாலும் எல்லாருக்கும் ஒரு கவலை இருந்தது. இயல்பான இந்த கவலை இருக்கவும் வேண்டும். இவ்வாறு கவலை கொள்வது ஒரு நம்பிக்கை கொண்டவரின் சிறப்பியல்பாகும். தமது சொந்த விருப்பத்தின் காரணமாகவோ அல்லது சுய பலவீனங்களின் காரணமாகவோ ஏற்படும் குறைகள், அமைப்பாளர்கள் செய்யும் ஏற்பாடுகளில் குறை ஏற்பட்டுவிடக் கூடாதே என்று கவலை கொள்கிறார். அல்லது சில மறைவான பாவங்களின் விளைவாக இறைக்கோபத்திற்கு காரணமாகி விடக்கூடாதே என்று கவலை கொள்கிறார். அந்த மறைவான பாவங்களை மனிதக் கண்கள் அறியாது.

ஆனால் எப்படியிருப்பினும் இறைவன் தனது சிறப்பான அருட்கொடையை வழங்கினான். புத்துணர்ச்சியும், ஆர்வத்தையும் கொண்டவாறு அமைப்பாளர்கள் இறைவனின் சன்னிதானத்தில் தலைகுனிந்தவாறே இருந்தனர். மாநாட்டின் அதிகாரி சாஹிப் மீண்டும் மீண்டும் மிகவும் அக்கறையுடன் என்னிடம் துஆவிற்காக விண்ணப்பித்துக் கொண்டே இருந்தார்கள். இதுவே ஒரு நம்பிக்கை கொண்டவரது சிறப்பம்சமாகம். அவர் தாம் செய்யும் ஒவ்வொரு பணியையும் தம் பக்கம் சுட்டிக் காட்டாமல் இறை அருளின் பக்கமே சுட்டிக் காட்டி அவனிடமே உதவியும் வேண்டுகிறார். அடியானின் இந்த நிலையைக் காணும் போது இறைவனும் தனது அடியார்களுக்கு உதவி புரிகிறான். மாநாடுகளை நடத்த வேண்டுமென இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கட்டளையிட்டான். இதனால் தூயவர்களின் ஜமாஅத் ஓரிடத்தில் ஒன்றுகூடி தமது ஆன்மீக முன்னேற்றத்திற்காக பாடுபட வேண்டும். ஒருவர் மற்றவருடன் சந்தித்து பரஸ்பர அன்பின் உறவை மேம்படுத்த வேண்டும். இந்த தூய

நோக்கங்களை இறைவனது விருப்பத்தைப் பெறுவதற்காக நிறைவேற்றி வந்தால், இறைவனுக்காக ஒன்றுகூடுவதற்காக வந்த மக்களுக்கு சிறந்த ஏற்பாடுகளையும் வசதிகளையும் செய்து கொடுக்க முயற்சி செய்தால் இவ்வாறான பணிகளில் இறைவன் தனது அருளை இறக்குகின்றான்.

மாநாடு நடத்த இந்தப் புதிய இடத்தில் ஒரு சில குறைகள் இருந்தாலும் அதை பெரிதுபடுத்துவதற்கு ஒன்றுமில்லை. இந்த இடத்தில் மாநாடு நடத்துவது இதுவே முதன் முறையாகும். அமைப்பாளர்களின் எண்ணம் நல்லெண்ணமாக இருப்பதால் இறைவன் குறைகளை மறைத்து விடுகிறான். அவ்வாறு இப்போதும் மறைத்திருக்கின்றான். எனவே இறைவன் குறைகளை மறைத்ததற்காக அமைப்பாளர்கள் இறைவனுக்கு அதிக அளவில் நன்றி கூற வேண்டும். இன்று அஹ்மதிய்யத்தின் உலகில் ஒவ்வொரு நாட்டிலும் மாநாடுகள் நடக்கின்றன. ஏறக்குறைய வருடம் முழுவதும் மாநாடுகள் நடந்தவண்ணம் உள்ளன. கடந்த வாரம் நீங்கள் எல்லாரும் அறிந்தது போன்று ஜெர்மனியின் ஆண்டு மாநாடு நடந்தது. இன்று முதல் அமெரிக்கா மற்றும கனடாவின் மாநாடுகள் ஆரம்பமாகின்றன. கடந்த வாரம் இங்குள்ள (ஜெர்மனி) அமைப்பாளர்களுக்கு இருந்த கவலையின் அதே நிலை துஆவின் கவனம் இன்று கனடா மற்றும் அமெரிக்காவின் மாநாட்டு அமைப்பாளர்களுக்கும் இருக்கும்; இருக்கவும் வேண்டும்.

மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அமைப்பாளர்களின் இந்த நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் தம்மை விருந்தினர் என்று கருதாமல் அந்த அமைப்பின் ஓர் அங்கமாக தம்மை கருதி உதவியாளர்களாகி விட்டால் அமைப்பாளர்களின் வேலை ஓரளவுக்கு குறைந்து விடும். பொதுவாக மாநாடுகளில் கலந்து கொள்பவர்கள் தமது நடத்தை, செயல் மற்றும் துஆவின் மூலம் அமைப்பாளர்களுக்கு உதவி செய்கின்றனர். இது இறைவனின் மாபெரும் அருளாகும். ஜெர்மனியின் உறுப்பினர்கள் இம்முறை ஜமாஅத்தின் அமைப்பாளர்களுக்கு மிக அதிகமாக ஒத்துழைப்பு வழங்கினார்கள். இன்று துவங்குகின்ற அமெரிக்கா மற்றும் கனடாவின் ஆண்டு மாநாட்டிலும் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் ஆன்மீக செல்வத்தால் தமது பைகளை நிரப்பும் எண்ணத்துடன் கலந்து கொள்ளும் நல்வாய்ப்பை இறைவன் வழங்குவானாக. மேலும் இதிலிருந்து முழுமையாக பயனடைய தமது பிறப்பின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு அதை அடைய முயற்சியும் செய்ய வேண்டும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் இந்த இயக்கத்தை வளர்ப்பவர்களாக இருக்க வேண்டும். இந்த மாநாட்டை வெறும் திருவிழா என்று எண்ணக் கூடாது. மக்களை சந்தித்து மகிழ்வதில் நேரத்தை வீணாக்கக் கூடாது.

இறைவனின் அருளால் உலகில் பொதுவாக எங்கு மாநாடுகள் நடந்தாலும் அதில் ஆற்றப்படுகின்ற சொற்பொழிவுகளின் தரம் மிகவும் சிறப்பாக உள்ளது. மாநாடுகளில் கலந்து கொள்பவர்கள் இதிலிருந்து முழுமையாகப் பயன்பெற இறைவன் அருள் செய்வானாக. கேட்கின்ற போதனைகளை தமது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். நான் கலந்து கொள்கின்ற மாநாடுகள் முடிவடைந்த உடன் இறைவனுக்கு நன்றி கூறும் நோக்குடன் குத்பா வழங்குவேன். அதில் மாநாடு மற்றும் எனது சுற்றுப் பயணத்தைப் பற்றிய குறிப்புகளை சுருக்கமாக கூறுவதுண்டு. இன்றும் அதே கருத்துக்களைக் கூறுவேன். ஆனால் இன்று முதல் கனடா மற்றும் அமெரிக்காவின் மாநாடுகள் ஆரம்பமாக இருப்பதால் அதையும் இடையில் கூறிக் கொள்கிறேன். காரணம் மாநாடு நடக்கும் இந்த இரண்டு ஜமாஅத்துகளும் பெரிய ஜமாஅத்துகள் ஆகும். இங்கு நடக்கின்ற மாநாடுகள் எல்லாம் இறை அருளின் ஒரு எல்லையில்லா தொடரை தம்முன் கொண்டதாக விளங்குகின்றன.

என்னுடைய முந்தைய குத்பாக்களிலும் நான் இக்கருத்தை தெரிவித்துள்ளேன். அதாவது இன்று ஜமாஅத் என்ற அளவில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு மட்டுமே உலகில் 24 மணி நேரமும் பகல் விடிந்து கொண்டேயிருக்கிறது. இங்கு (ஜெர்மனி) இப்போது மதிய வேளையாகும். சூரியன் காய்ந்து கொண்டிருக்கிறது. அதே வேளையில் அமெரிக்கா மற்றும் கனடாவில் சூரியன் உச்சியை அடைந்து கொண்டிருக்கும் காட்சியைக் காட்டுகிறது. மேலும் ஜமாஅத் என்ற அளவில் உலகில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஒன்றுதான் இறைவன் விருப்பத்தைப் பெறுவதற்காக ஏதாவதொரு நிகழ்ச்சியை அன்றாடம் நடத்தி வருகிறது. எனவே இறைவனின் இந்த அருள்களை எண்ணுவது நம்மால் முடியாத ஒன்றாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு கவிதை வரியில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அருள்பாலிக்கும் என் இறைவா! உனது அருள்களுக்கு நான் எவ்வாறு நன்றி கூறுவது? உனக்கு நன்றி கூறும் பணியைச் செய்யும் நாக்கினை எங்கிருந்து நான் கொண்டு வரட்டும்!

ஆக இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நடந்து கொள்ளும் இந்த நடைமுறை இன்றும் கம்பீரமாக தொடர்ந்து வருகிறது. ஒருநாள் மட்டுமல்ல; ஒவ்வொரு நொடிப்பொழுதும் நன்றி தெரிவிக்கும் புதிய வழிகளை நமக்கு திறந்தவாறு இறைவனின் நடைமுறை வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்டு வந்த குறிக்கோளுடன் ஒன்றியிருக்கும் வரை இன்ஷா அல்லாஹ் இக்காட்சிகளை நாம் கண்டு வருவோம். இறைவனின் இந்த அருட்கொடைக்கு நாம் எவ்வாறு நன்றியுடையவர்களாக இருக்க முடியும்?

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் செலுத்தும் உண்மையான நன்றி இறையச்சமும் தூய்மையுமேயாகும். நீங்கள் உண்மையான முறையில் இறையச்சத்தையும், தூய்மையையும் பேணினால் நீங்கள் எல்லையில் நிற்கிறீர்கள். உங்களை யாராலும் வெல்ல முடியாது என்ற நற்செய்தியை உங்களுக்கு தெரிவிக்கிறேன்.

நன்றி கூறும் இந்த முறையை நாம் பின்பற்ற வேண்டும். இதை நாம் நமது வாழ்க்கையின் அங்கமாக்கிக் கொள்ள வேண்டும். மாநாடுகளில் கலந்து கொள்ள வருபவர்களும், இறைவனின் அருளைப் பெற்று மாநாட்டை நல்லவிதமாக முடித்துள்ளவர்களும் ஆகிய ஒவ்வொரு அஹ்மதியும் தனது இறையச்சத்தின் தரத்தை உயர்த்த எப்போதும் முயற்சி செய்து வர வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று உலகில் எந்த சக்தியும் நமது முன்னேற்றத்திற்குத் தடையாக முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இறைவன் செய்துள்ள வாக்குறுதிக்கேற்ப அவர்களுக்கு இறைவன் வெற்றியை வழங்குவான். நாம் இறையச்சத்துடன் வாழ்ந்தால் அந்த வெற்றியில் நாமும் அங்கம் வகிக்கலாம்.

எனவே கனடா, அமெரிக்கா அல்லது ஐரோப்பாவின் பணக்கார நாடுகளில் வசிக்கும் அஹ்மதி அல்லது உலகத்தில் பல்வேறு இடங்களில் வசிக்கும் ஒவ்வொரு அஹ்மதியும் நமது வெற்றிக்கான ஆயுதம், மேற்கத்திய நாடுகளுக்கு வருவதில் இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அல்லது இங்கு சுகமாக வாழ்வதால் வெற்றி வராது. இந்த வெற்றி செல்வத்தால் வரும் ஒன்றல்ல. இந்த வெற்றி பௌதீக முயற்சியல் வராது. மாறாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று இறையச்சத்தில் முன்னேறுவதுதான் இந்த வெற்றியின் ஆயுதமாகும்.

எனவே இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு, வருடத்தின் ஒரு சில நாட்கள் ஜமாஅத் மக்களை ஒன்றுகூட்டி இறையச்சத்திற்கான பயிற்சி அளிக்கும்படி கட்டளையிட்டான். உள்ளத்தில் ஏறியுள்ள துருவை போக்கி விட வேண்டும் எனவும், ஒருவருடன் ஒருவர் அமர்ந்து பரஸ்பரம் அன்பைப் பரிமாற வேண்டும். நேசத்தின் உறவை மேம்படுத்த வேண்டும். இவ்வாறு புத்துணர்ச்சியுடன் ஓர் அஹ்மதி தனது பிறவியின் நோக்கத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும். தமது அறிவின் தாகத்தை தீர்த்துக் கொள்ள வேண்டும். தமது தர்பிய்யத்திற்கான தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

ஒரு வாரத்திற்குப் பிறகு ஜெர்மனியைச் சேர்ந்தவர்களும் சிறப்பாக மாநாட்டை நடத்தினோம் என்ற அளவில் மட்டும் இதை நினைவு வைத்திருக்கக் கூடாது. இந்த நபரின் சொற்பொழிவு நன்றாக இருந்தது என்ற பேச்சை மட்டும் மிச்சம் வைத்திருக்கக் கூடாது. அல்லது இந்த நபர் அழகாக நஸ்ம் படித்தார் என்ற அளவில் மட்டும் நினைவு வைத்திருக்கக் கூடாது. மாறாக நீங்கள் கேட்டவைகளை உங்கள் வாழ்வின் அங்கமாக்கிக் கொள்ள வேண்டும். இந்த உணர்வுடன் கனடா மற்றும் அமெரிக்காவின் அஹ்மதிகள் மாநாட்டைக் கேட்க வேண்டும். இந்த நிலை இருந்தால் நாம் நன்றி கூறுபவர்களாக இருப்போம். உண்மையான முறையில் நன்றி கூறுவதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடம், மிகவும் பணிவுடன் அருள்பாலிக்கும் என் இறைவா! நான் உனக்கு நன்றி கூறுவது எங்ஙனம்? என்றார்கள். ஒவ்வொரு நொடியும் நாம் இறைவனின் அருள்களை நினைத்து நமது உள்ளத்தையும் மூளையையும் இறை சிந்தனையால் நிரப்ப வேண்டும். இறைவனின் நினைவால் நமது நாவை நனைத்து நாம் இறைவனுக்கு நன்றியை வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு நொடியும் நாம் இறைவனின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட்டு நமது உடலின் ஒவ்வொரு உறுப்பையும் இறைவனுக்கு நன்றி செலுத்த வைக்க வேண்டும். நமது நிலை இவ்வாறு ஆகிவிட்டால் இறைவன் தன்னுடைய கருணை என்னும் போர்வையில் போர்த்திக் கொள்வான்.

**இறைவன் கூறுகின்றான்:**

*நீங்கள் என்னை நினைவு கூர்ந்தால் நானும் உங்களை நினைப்பேன்.*

*எனக்கு நன்றி கூறுங்கள். நன்றிகேடு காட்டாதீர்கள்.*

இறை அடியார் இறைவனை நினைவு கூறும் போது அவனது எந்த செயலுக்கும் நற்கூலி வழங்காமல் இறைவன் விட்டுவிடுவதில்லை. பல நூறு மடங்கிற்கு அதிகமான நற்கூலியை வழங்குகின்றான். இன்னும் அதிகமாக வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளான். மனிதன் இறைவனை நினைவு கூறுகிறான் என்றால் என்ன? இறைவன் மனிதனை நினைக்கிறான் என்றால் என்ன? இறைவன் மனிதனை நினைவு கொள்கின்றான் என்றால் இறைவன் தனது அருட்கொடைகளை மனிதனுக்கு வழங்குகின்றான் என்று பொருள். மனிதன் இறைவனை தொடர்ந்து எண்ணினால் அவன் தனது அருட்கொடைகளை வழங்குகிறான். அதன் பிறகு நன்மையிலும், இறையச்சத்திலும் முன்னேறுவதற்கான புதிய தொடர் ஆரம்பமாகி விடுகிறது. புதிய தகுதிகள் பிறக்க ஆரம்பித்து விடுகின்றன. இறைவன் தனக்கு நெருக்கமாக வருவதற்காக புதிய புதிய வழிகளைக் காட்டுகிறான். இவ்வாறான அடியாரை இறைவன் எப்போதும் நினைவில் வைத்திருப்பான். அவனை துன்பங்களிலிருந்து காப்பாற்றுகிறான்.

எனவே, மனிதன் இறைவனை நினைவு கூறுகின்ற போது இறைவனை எல்லா சக்திகளுக்கும் உறைவிடம் என்று எண்ணி அவனது பாதுகாவலில் வருவதற்காக அவனிடம் உதவி பெறுவதற்காக இறைவனை நினைவு கூறுகிறான். இறைவன், *நான் உங்களை நினைவு கூறுகிறேன்* என்று கூறினால், இறைவன் இப்படிப்பட்ட தனது அடியார்களுக்கு அருட்கொடைகளை வழங்குகின்றான். அவனை தனது பாதுகாப்பில் வைத்திருக்கிறான். அவனது எதிரிகளை தானே பழிவாங்குவான். மனிதன் சற்றும் நினைத்துக்கூட பார்க்காத இடத்திலிருந்து அவனுக்கு ரிஸ்கை வழங்குவான் என்று பொருள். இப்படிப்பட்ட நல்லடியார்களுக்கு எதிராக உலகவாதிகள் ஆயிரம் தான் முயற்சி செய்தாலும் அவர்களின் குறிக்கோளிலிருந்து யாராலும் தடுக்க முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வெற்றி இவ்வாறு நினைவு கூறுபவர்களைச் சார்ந்துள்ளது என்று இறைவன் கூறியுள்ளான். இவ்வாறு நினைவு கூறுவதால்தான் இவ்வுலகையும் மறுவுலகையும் சீர் செய்ய முடியும். இதுவே உண்மையான நன்றியுள்ளவனாக ஆக்கும். எனவேதான் இறைவன் நினைவு கூற வேண்டும் என்று சொன்ன இடத்தில், நன்றி செலுத்த வேண்டும் என்ற கருத்தையும் சேர்த்துக் கூறியுள்ளான். இறைவன் மனிதனை நினைவு கூறுவதன் மூலமாக தனது அருட்கொடைகளை மனிதனுக்கு வழங்குகிறான். இது இறைவனது செயலாகும். இறைவனின் அருட்கொடைகள் இன்னும் அதிகமாக இறங்க ஆரம்பித்து விடுகின்றன; புதிய தொடர் ஆரம்பமாகி விடுகிறது.

இவ்வசனத்தின் இறுதியில் இறைவன் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளான். ஒருபோதும் நன்றிகேடு காட்டுபவர்களாக ஆகிவிடக் கூடாது என்கிறான். *இந்த அருட்கொடைகளை நிராகரிப்பவர்களாக ஒருபோதும் ஆகிவிட வேண்டாம் என கூறியுள்ளான்.* எந்த புத்திசாலியாவது இறைவனின் அருட்கொடைகளை கண்டபின் நிராகரிப்பவராக ஆவாரா? ஆனால் மனிதன் அறியாமையால் நிராகரிப்பாளனாகவும் நன்றிகெட்டவனாகவும் இறைவனை நினைவு கூறுவதாக சொல்லி விட்டு செயல்பூர்வமாக இறைவனை நினைவு கூறாதவனாகவும் இருப்பான். உலகில் ஒருவர் ஒரு குறிப்பிட்ட நபரை அதிகமாக நேசிக்கின்ற போது அவரைப் பற்றிய எண்ணம் அதிகமாக உள்ளத்தில் தோன்றும். அவருடைய விருப்பங்களை எப்படி நிறைவேற்றுவது என்று எல்லா நேரமும் யோசித்துக் கொண்டிருப்பான். அவர் ஒன்று சொன்னால் அதை அப்படியே செயல்படுத்த எல்லா நேரமும் காத்துக் கொண்டிருப்பான். எனவே இறைவனை நேசிப்பது உண்மை என்றால் அவனையே எப்போதும் எண்ணிக் கொண்டிருப்பது அவசியமாகும். அவனது கட்டளைகளை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டு செல்வது அவசியமாகும். அவனால் வழங்கப்படும் அருட்கொடைகளை நன்றியுணர்வோடு சரியாகப் பயன்படுத்துவதும் அவசியமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று உண்மையான நன்றியுணர்வின் நிலை ஏற்படுகிறது. இது இறையச்சத்தால் உருவாகும் ஒன்றாகும். இது உண்மையான இறையச்சமாக இல்லையென்றால் பிறகு அருட்கொடைகளை நிராகரிப்பதாகி விடும். இது அல்லாஹ்வுக்கு நன்றிகேடு காட்டுவதாகும். இந்த ஒரு வசனத்தில் இறைவன் நம்பிக்கை கொண்டோருக்காக நன்றியுணர்வை வெளிப்படுத்தி இறை நெருக்கத்தை வழங்கும் வழிகளைக் காட்டித் தந்துள்ளான். அவனை நினைவு கூர்ந்து அவனுக்கு நன்றிகூறும் நிலையை நமக்கு இது தருகிறது. அதன் பிறகு இறைவனுக்கு நெருக்கமானவனாக மனிதனை ஆக்குகிறது. இதுவே ஒரு நம்பிக்கையாளரின் விருப்பமாகும். அவர் இறை நெருக்கத்தைப் பெற வேண்டும் என எப்போதும் விரும்புகிறார். இந்தக் கருத்தை ஒவ்வொரு அஹ்மதியும் தன்னில் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இப்போது நான் ஏற்கனவே கூறியதற்கிணங்க ஜெர்மனியின் ஆண்டு மாநாடு தொடர்பாக சிலவற்றைக் கூறுவேன். இம்முறை புதிய இடத்தில் மாநாடு நடந்தது என முன்னதாகவே நான் கூறினேன். இதன் காரணமாக நமக்கு சில சௌகரியங்கள் கிடைத்ததாக நமக்கு தென்படுகின்றது. மிகவும் நிம்மதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதே வேளையில் சில குறைபாடுகளும் இருந்தன. ஆனால் இந்த குறைபாடுகளின் காரணமாக அமைப்பாளர்களை குற்றம் சொல்லக்கூடிய அளவிற்கு இது பெரிய விஷயம் இல்லை. 100% முழுமை என்பது மனிதனுடைய எந்தப் பணியிலும் இருக்கவே முடியாது. இவ்வளவு முக்கியத்துவம் இறைவனின் பணிகளில்தான் இருக்கிறது. எனவே மனிதன் செய்கின்ற காரியங்களில் சீர்திருத்தம் ஏற்படுத்த எப்போதும் வாய்ப்புகள் தென்படும். அதற்காக இறைவன் துஆ செய்யுமாறு கவனமூட்டியுள்ளான். செயல்படுவதும், வழிகளைக் கடைபிடிப்பதும் தமது முயற்சியை முழுமையாக செய்வதும் அடியானின் பணியாகும். அதன் பிறகு அதை இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும். அதில் காணப்படும் குறைபாடுகளை இறைவனே நிவர்த்தி செய்ய வேண்டும். அதன் பிறகு ஏற்படும் விளைவிற்காக நன்றி கூற வேண்டும் என்று கவனமூட்டியுள்ளான். இதனால் அந்த குறைபாடுகள் சிறந்த முறையில் நிவர்த்தி அடைய வேண்டும். மனிதன் ஒரு காரியத்தை திறம்பட செய்தால் அதற்காக நன்றி தெரிவித்தால் இறைவன் மனிதனின் காலடியை இன்னும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்கிறான். இந்தப் பாடத்தை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தமது செயலின் மூலம் புகட்டியுள்ளார்கள்.

நான் சிலவற்றை குறிப்பெடுத்துள்ளேன். அல்லது எனக்கு கூறப்பட்ட விஷயங்களை நான் குறிப்பிட்டுக் கூறுகிறேன். வருங்காலத்தில் இதை இன்னும் திறம்பட செய்ய வேண்டும் என்பதற்காக நான் இதை கூறுகிறேன். ஆனால் இதற்கு முன்னதாக, குறைகளை மட்டும் எடுத்துக் கூறத் தெரிந்தவர்களிடம் ஒன்றைக் கூறிக் கொள்கிறேன். நீங்கள் உண்மையிலேயே சீர்திருத்தத்தை விரும்பினால் குறைகளை ஆங்காங்கே கூறிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக நீங்கள் பொறுப்பாளர்களிடம் உங்களது ஆலோசனைகளைக் கூறுங்கள். நீங்கள் கண்ட குறைகளை அவர்களிடம் சொல்லுங்கள். வேலை செய்பவர்களுக்காக துஆ செய்யுங்கள். இறைவன் அவர்களுக்கு இன்னும் சிறந்த முறையில் பணியாற்றும் நல்வாய்ப்பு வழங்குவானாக! பொறுப்பாளர்களும் திறந்த மனப்பான்மையுடன் கவனமூட்டுபவர்கள் கூறுவதை அக்கறையுடன் கேட்க வேண்டும். மாநாட்டிற்காக ரெட் புக் ஒன்று உள்ளது. அதில் எல்லா குறைகளும் குறிக்கப்படுகின்றன. உண்மையிலேயே குறைகள் என்று உணரப்படுகின்றவற்றைப் பற்றி கவனமூட்டப்பட்ட விஷயங்கள் அதில் எழுதப்பட வேண்டும்.

இந்த வரிசையில் ஒரு குறையை அமைப்பாளர்களும் உணர்ந்திருந்தார்கள். அது ஆண்களின் திடலிலும் பெண்களின் திடலிலும் எதிரொலி இருந்தது என்ற குறையாகும். இதன் காரணமாக முதல் நாளன்று நான் ஆற்றிய உரை திடலில் அமர்ந்திருந்தவர்களுள் கால் பகுதி மக்களுக்கு சரியாகப் புரியவில்லை. அவர்களால் சரியாக உரையைக் கேட்க முடியவில்லை. பிறகு அதை சீரமைக்க அமைப்பாளர்கள் முயன்றனர். அதில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் முழுமையான முறையில் அந்தக் குறை நிவர்த்தி செய்யப்படவில்லை. எனவே அடுத்த வருடம் ஒலிபெருக்கி அமைப்பை சீர் செய்ய வேண்டும். அல்லது சிலர் கூறியதைப் போன்று மேடையின் இடத்தை மாற்றி அமைக்க வேண்டும். அல்லது அந்தக் குறைக்கான காரணத்தை அறிந்து அது எதுவாக இருந்தாலும் சரி செய்ய வேண்டும். ஒலிபெருக்கி அமைப்பு மிகவும் அவசியமானதாகும். இது இல்லையென்றால் மக்களை அமைதியாக உட்கார வைப்பது அமைப்பாளர்களுக்கு மிகவும் கடினமாகி விடும். ஆண்கள் கூட

அமைதியாக உட்கார்ந்திருப்பார்கள். ஆனால் 10, 12 வயதுடைய குழந்தைகள் எழுந்து சென்று விடுவார்கள். பெண்களின் பகுதியில் அமைதியாக இருக்க முடியாது. ஆண்கள் உட்கார்ந்திருப்பார்கள். அல்லது அங்கிருந்து எழுந்து சென்று விடுவர். ஆனால் பெண்களை அமைதிப்படுத்துவது குறிப்பாக குழந்தைகள் கொண்ட பெண்களை அமைதிப்படுத்துவது மிகவும் கடினமாகும். ஆனால் இந்த முறை பெண்களிடம் நான் ஒரு நல்ல விஷயத்தைக் கண்டேன். அதாவது என்னுடைய உரை நிகழ்ந்த போது எனது குரல் அவர்களுக்குத் தெளிவாகக் கேட்காதிருந்தது. இதற்காக பின்னால் உட்கார்ந்திருந்த பெண்கள் அமைப்பாளர்களுக்கு செய்தி அனுப்பினார்கள். ஒலியை சரி செய்யுங்கள் என்று செய்தி அனுப்பினார்கள். ஆனால் நிர்பந்தத்தின் காரணமாக ஒலியை சரிசெய்ய முடியவில்லை. எனினும் மிகவும் அமைதியுடனும் பொறுமையுடனும் பெண்கள் அமர்ந்திருந்தார்கள். ஜெர்மனியின் பெண்களிடம் இவ்வளவு அமைதியையும் பொறுமையையும் நான் முதன்முதலாக இப்போதுதான் பார்த்தேன். சிலருடைய கருத்தின்படி வெளியில் அதிக வெப்பம் இருந்தது. மாநாட்டு அரங்கம் குளிர்சாதன வசதியுடன் இருந்ததால் உள்ளே அமர்ந்திருப்பதே சிறந்தாகும் என நினைத்தார்களோ என்னவோ! நான் மூன்று நான்கு வருடங்கள் முன்பு இங்குள்ள லஜ்னாக்களை எச்சரித்தேன். நீங்கள் அதிகமாக கூச்சலிட்டால் அடுத்த வருடம் மாநாடு நடத்தக் கூடாது என்று எச்சரித்தேன். எனவே மேம்பாட்டின் பக்கம் அதிக கவனம் ஏற்பட்டது.

இன்னொரு குறையும் இருந்தது. அதாவது குழந்தைகளை ஒரே அறையில் உட்கார வைத்ததால் ஏற்பட்ட குறையாகும். அந்த அறையை இரண்டாகத் திரையிட்டுப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆனால் திரையிடுவதால் சப்தத்தைத் தடுக்க முடியாது. குழந்தைகள் இருக்கும் இடத்தில் கூச்சல் எழும் என்பது வெளிப்படையானது. குழந்தைகளின் இந்த கூச்சல் சில நேரம் மெயின் ஹாலிலும் இடையூறை விளைவித்தது. இதை அடுத்த வருடம் சீர் செய்ய வேண்டும்.

இன்னும் ஒருசில சின்னச்சின்ன குறைகள் இருந்தன. இவைகளை நிவர்த்தி செய்ய அடுத்த வருடம் அமைப்பாளர்கள் முயற்சி செய்ய வேண்டும். மக்கள் ஏதாவது குறையைக் கண்டால் அது அடுத்த வருடம் சீர் செய்யப்பட வேண்டும் என்பதற்காக மக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அதை மாநாட்டின் ரெட் புக்கில் எழுதி அதை பதிவு செய்ய வேண்டும். அதை முன் வைத்து மாநாட்டின் குழுவினர் பரிசீலனை செய்ய வேண்டும். நமது காலடி எப்போதும் முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். பொதுவாக இக்காட்சியை இறைவன் நமக்கு எல்லா இடங்களிலும் காட்டி வருகின்றான். நமது காலடி முன்னேறிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஜெர்மனி மற்றும் பிற நாடுகளிலிருந்து வந்திருந்த ஜமாஅத் அல்லாத விருந்தினர்கள், குறிப்பாக அண்டை நாடுகளிலிருந்து வந்திருந்த விருந்தினர்கள் மிகவும் நல்ல விளைவைப் பெற்றனர். அவர்களுக்கு நமது ஏற்பாடுகள் மிகவும் பிடித்திருந்தது. ஆனால் நம்மில் இன்னும் அதிக முன்னேற்றம் இருக்க வேண்டும் என்பதற்காக நாம் நமது குறைகளை கவனிக்கிறோம். நான் விருந்தினர்களிடம் ஏற்பாடுகளைப் பற்றி யாரிடமெல்லாம் கேட்டேனோ அவர்கள் எல்லாருமே மாநாட்டின் அமைப்பு, ஏற்பாடுகள், மக்களிடம் காணப்படும் அன்பு, நேசம், பணிகளை மேற்கொண்டவர்கள் நடந்து கொண்ட முறை ஆகியவற்றின் மூலம் மிக நல்ல விளைவைப் பெற்றிருக்கிறார்கள். எனவே இந்த மாநாடுகளும் நமது தப்லீகிற்கான வழியாக அமைகின்றன. எனவே ஒவ்வொரு அஹ்மதியும் நாம் அஹ்மதிய்யத்தின் தூதுவர் ஆவோம் என்ற எண்ணத்துடன் எப்போதும் இருக்க வேண்டும். நமது முன்மாதிரியை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் மாநாட்டின் போது பைஅத்துகள் நடப்பதுண்டு.

இம்முறையும் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் மக்களின் நல்ல முன்மாதிரியைப் பார்த்து நல்ல விளைவுக்கு ஆளாகி பைஅத் செய்ய வேண்டும் என்று தமது ஆர்வத்தை வெளிப்படுத்தினார்கள். மாநாடு முடிந்தவுடன் அவர்கள் பைஅத் செய்து விட்டனர்.

ஆனால் ஒரு சம்பவம் எனது கவனத்திற்கு வந்தது. ஒருவருடைய மனிபர்ஸ் திருடு போய் விட்டது. இவ்வாறு இன்னும் சில சம்பவம் நிகழ்ந்திருக்கலாம். இதில் வெட்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால் மனிபர்ஸை பறிகொடுத்தவர் ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு புதிய அஹ்மதி இளைஞர் ஆவார். அவர் இந்த சம்பவத்தை தனது நல்லொழுக்க சீர்திருத்தத்தை எடுத்துச் சொல்வதற்காக நம்மிடம் சொன்னார். ஆனால் ஹித்மத்தே கல்க் துறையில் பணியாற்றியவர்களுக்கு இது கவலை அளிக்கக்கூடிய ஒன்றாகும். இவ்வாறான சம்பவங்கள் நடக்கும். ஆனால் இதை சரியான முறையில் கண்காணித்திருந்தால் இந்த தவறுகளை சரிசெய்திருக்கவும் முடியும். இவ்வாறு நடப்பதை குறைத்திருக்கலாம். இன்னும் 100% இதை நடக்காமல் பார்த்திருக்கலாம்.

நான் குறிப்பிடுகின்ற அந்த இளைஞர் என்னிடம் இதை கூறும்போது அவர் நான் மிகவும் அதிகமாக கோபமடையக் கூடியவனாவேன். சின்னச் சின்ன விஷயத்திலெல்லாம் எனக்கு கோபம் ஏற்பட்டு விடும். நான் சண்டையிட்டு அடிக்கத் தயாராகி விடுவேன். ஆனால் என்னுடைய இந்த நடைமுறை நான் அஹ்மதியாவதற்கு முன்னால் இருந்தது. நான் அஹ்மதி ஆவதற்கு முன் இவ்வாறு என்னுடன் நடந்திருந்தால், அதாவது என்னுடைய மனிபர்ஸ் திருடு போயிருந்தால், என்னுடன் இருந்த எல்லாருடனும் சண்டையிட்டிருப்பேன். சப்தமிட்டு அமைப்பாளர்களை எல்லாரையும் விரட்டியிருப்பேன். ஆனால் அஹ்மதிய்யத் எனக்கு பொறுமையைக் கற்றுத் தந்தது. எனவே இதை நான் பெரிதுபடுத்தவில்லை. இது என்னிடம் ஏற்பட்ட ஒரு பெரிய மாற்றமாகும். இதை நான் அஹ்மதியான பிறகு என்னிடம் உணர்ந்தேன். மிகவும் அதிகமாக கோபம் கொள்ளும் ஒருவர் அஹ்மதிய்யத்தின் காரணாக இவ்வளவு மென்மையான குணமுடையவராக மாறுவது இறைவனின் செயலாகும். இறை அருளின்றி இது நடக்காது.

மிக நீண்ட காலமாக அஹ்மதிகளாக இருந்தும் தனது கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும் அஹ்மதிகளுக்கு இது ஒரு பாடமாகும். சின்னச்சின்ன விஷயங்களுக்காகவும் சண்டையிடுகின்றனர். எனவே தமது உணர்வுகளை கட்டுப்படுத்துவதை நீங்கள் அஹ்மதி என்பதற்கான அடையாளமாக ஆக்குங்கள். நாம் ஓர் அஹ்மதியாவோம் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் நமது உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். எவ்வாறிருப்பினும், சில குறைபாடுகள் நமது கவனத்திற்கு வரும்போது நம்முடைய தர்பிய்யத்திற்கு அவை காரணமாக அமைகின்றன.

பொதுவாக ஜமாஅத் உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினார்கள். இதற்காக பொறுப்பாளர்கள் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். பணியாளர்கள் மிகவும் கடின உழைப்போடு பணியாற்றினர். இதற்காக மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். ஜெர்மனியில் ஜமாஅத் மக்கள் பொதுவாக ஜமாஅத்துடன் நல்ல விசுவாசமும் தூய உணர்வுமிக்கவர்களாக காணப்பட்டனர். மாநாட்டின்போதும் நான் இந்தக் காட்சிகளைக் கண்டேன். பல இடங்களுக்கு பள்ளிவாசலின் திறப்பு விழாவிற்கு நான் சென்றேன். அங்கேயும் இந்தச் சூழ்நிலையைக் கண்டேன். இந்த விசுவாசம் மற்றும் தூய உணர்வை இறைவன் இவர்களிடம் இன்னும் வளர்ப்பானாக. குறிப்பாக இளைஞர்கள் தூய்மையில் முன்னேறியவர்களாக நான் கண்டேன்.

ஜமாஅத்தில் பலவீனமானவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால் அதிலும் சிலர் பலவீனமாகவும் இன்னும் சிலர் கோணலான போக்குடையவராகவும் இருப்பார். இறைவன் நூற்றுக்கணக்கான விசுவாசமுள்ள தூயவர்களை எழுப்புகின்றான். தமது தூய முன்மாதிரியைக் காட்டக் கூடியவர்களை எழுப்புகின்றான். ஆக இது நமக்கு எங்கும் தென்படாத, அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மட்டும் காணப்படும் ஓர் சிறப்பு மிகுந்த அழகாகும். அல்லாஹ் இதில் இன்னும் பொழிவை உருவாக்கிக் கொண்டே செல்வானாக!

மாநாடு தொடர்பான இன்னொரு முக்கிய பணி, மாநாடு முடிந்தவுடன் அதை விரைவாக அப்புறப்படுத்துவதும் ஆகும். குறிப்பாக நாம் சில குறிப்பிட்ட நாட்களுக்காக வாடகைக்கு இடம் வாங்கியிருக்கும் போது இது இன்னும் துரிதமாக செய்யப்பட வேண்டிய பணியாகும். இம்முறை இது புதிய இடம் என்பதால் மாநாட்டின் அனைத்துப் பணிகளையும் விரைவாக முடிக்க வேண்டியதிருந்தது. இதற்காக நம்மிடம் இரண்டு நாட்கள் மட்டுமே இருந்தன. வாடகை அதிகமாகி விடாமல் இருக்க இப்பணியை விரைவாக செய்ய வேண்டும்.

எனக்கு வந்த அறிக்கையின் அடிப்படையில் ஜமாஅத்தில் வகாரே அமல் செய்து இரண்டு நாட்களுக்குள் இந்த எல்லாப் பணிகளும் முடிந்து விட்டன. அல்ஹம்துலில்லாஹ். உள்ளே இருந்த பணிகள் முடிந்து விட்டன. ஆனால் வெளிப் பணிகள் முடிவதற்கு ஒரு நாள் அதிகமானாலும் இதுவும் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிந்து விட்டது. இம்முறை மாநாட்டிற்கு முன்னும் மாநாடு முடிந்த பின் அப்புறப்படுத்தும் பணிகளிலும் பாகிஸ்தானிலிருந்து புதிதாக வந்திருந்தவர்களில் ஒரு பெரிய குழுவினர் பங்கு வகித்தனர். அவர்கள் மிகவும் கடினமாக உழைத்திருக்கிறார்கள். எப்போதும் ஒரு விஷயத்தை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். பாகிஸ்தானிலிருந்து பிரச்சனைகளின் காரணமாக வெளியேறியுள்ளவர்களுக்கு நான் கூறுகிறேன். ஜமாஅத் இன்றி உங்களுக்கு வேறு சிறந்த வாழ்க்கை கிடைக்கும் என்று எண்ணாதீர்கள். ஜமாஅத் இன்றி உங்களுக்கு எந்த வாழ்க்கையும் இல்லை. ஜமாஅத் இன்றி உங்களுக்கு ஒருவேளை உலகம் கொஞ்சம் கிடைத்து விடலாம். ஆனால் சந்ததிகள் வீணாகி விடும். எனவே எப்போதும் ஜமாஅத்துடனும் ஜமாஅத் அமைப்புடனும் சேர்ந்திருங்கள். பொதுவாக வெளியிலிருந்து வருகை தந்த ஜமாஅத் அல்லாத விருந்தினர்கள் மிகவும் நல்ல தாக்கத்தைப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். குழுக்களாக என்னை சந்தித்தனர். தனித்தனியாகவும் சந்தித்தனர். மீண்டும் மீண்டும் பலமுறை வருபவர்கள் மத்தியில் அன்பும் அறிமுகமும் இப்போது வளர்ந்து வருகிறது. இவர்கள் அஹ்மதிய்யத்திற்கு நெருங்கி வருகின்றனர். விரைவாக இவர்களது உள்ளங்கள் திறப்பதற்கும் அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கும் இறைவன் நல்வாய்ப்பு வழங்குவானாக!

மாநாட்டு நிகழ்ச்சிகளின் விரிவான அறிக்கை அல் ஃபஸ்லில் வெளிவரும். அதிலிருந்தும் சில விரிவான செய்திகளும், மக்களிடம் ஏற்பட்ட நல்ல விளைவுகளையும் தெரிந்து கொள்ளலாம். எனினும் நானும் சுருக்கமாக சிலவற்றைக் கூறுகிறேன்.

ஒரு கிறித்தவ நண்பர் தமது மனைவியுடன் மால்டா என்ற இடத்திலிருந்து வந்து இந்த மாநாட்டில் கலந்து கொண்டார். இவர் இரண்டாவது முறையாக இதில் கலந்து கொள்கிறார். படித்தவர் ஆவார். அவரது ஊரில் செய்தித்தாள்களில் கட்டுரைகள் எழுதுபவர் ஆவார். அரசாங்கத்தின் ஒரு கமிட்டியில் இவர் உறுப்பினரும் ஆவார். உங்களது சொற்பொழிவுகளிலிருந்து நான் சில குறிப்புகளை எடுத்துள்ளேன் என்று கூறி அவர் குறிப்பு எழுதி வைத்த கையேட்டை எனக்கு காண்பித்தார். இதை எனது

ஊருக்கு சென்றவுடன் பத்திரிகைகளில் எழுதுவேன் எனறும் கூறினார். மேலும் உங்களது இறுதியுரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதிலிருந்தும் நான் குறிப்புகள் எழுதியுள்ளேன் என்றார். நான் ஆற்றிய இறுதியுரை ஜமாஅத்தின் தர்பிய்யத்திற்காகவே நிகழ்த்தினேன். ஆனால் அதிலும் அவருடைய கண்ணோட்டத்தில் சில குறிப்புகள் அவருக்கு கிடைத்துள்ளன.

இவ்வாறே பல்கேரியா நாட்டின் ஒரு கிறித்தவ வழக்கறிஞர் வந்திருந்தார். அவர் பெரும்பாலும் இங்கு வருவதுண்டு. அவர் பெண்களுக்காக நான் ஆற்றிய உரையில் விவாகரத்து மற்றும் பெண்கள் சம்பந்தமாக கூறிய இஸ்லாமிய போதனைகளை மிகவும் கவனமாகக் கேட்டார். அவர் ஒரு வழக்கறிஞராவார். உங்களது ஜமாஅத்தில் எனக்கு மிகவும் பிடித்த ஒன்று வழக்குகளை தீர்ப்பதற்காக உங்களிடம் ஒரு அமைப்பு உள்ளது என்று அவர் கூறினார். இன்று மக்களிடம் பொறுத்துக் கொள்ளும் மனப்பான்மை மிகவும் குறைந்து கொண்டேயிருக்கிறது. உலகத்தில் பொறுமையின்மை வளர்ந்து வருகிறது. இதன் தாக்கம் ஜமாஅத்தையும் பாதித்துள்ளது. எனவே நாம் உலகத்தின் தீய விளைவுகளில் இருந்து எப்போதும் பாதுகாப்பாக இருக்க மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பிறகு அவர் எங்கள் நாட்டிலும் தலாக், குலா போன்ற வழக்குகள் மிகுதியாகிக் கொண்டே வருகிறது என்று கூறினார். உங்களிடம் வழக்குகளைத் தீர்ப்பதற்காக ஓர் அமைப்பு உள்ளது. ஆனால் எங்களிடம் அதுவும் இல்லை என்றார். எனவே, இவ்வாறு ஜமாஅத் அல்லாதவர்களும் நல்ல விளைவிற்கு ஆளாகின்றனர். இதை அவர்கள் கவனிக்கின்றனர். இவையெல்லாம் அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்குக் காரணமாக அமைகிறது. இதன் காரணமாக நான் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். ஜமாஅத்தும் நன்றியுடையதாக இருக்க வேண்டும்.

இஸ்லாமிய போதனைகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் மூலமாக மக்களுக்கு எட்டவைக்கும் பணியை இறைவன் நம்மிடம் ஒப்படைத்துள்ளான். இது மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்குக் காரணமாக அமைகிறது. ஆனால் மாநாட்டின் சொற்பொழிவுகளைக் கவனமாக கேட்காதவர்கள் இதை கவனிக்க வேண்டும். ஜமாஅத்தை கைவிட்டு விட்டு சண்டை சச்சரவுகளை ஜமாஅத்தின் விதிமுறைகளை மீறி நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்கின்றனர். உலகவாதிகள் நமது ஜமாஅத்தின் இந்த வழிமுறை மிகவும் நன்றாக இருக்கிறது என்று கூறுகின்றனர்; இதை அவர்கள் விரும்புகின்றனர்.

ஜெர்மனியைச் சேர்ந்த விருந்தினர்களுடன் ஒரு தனி நிகழ்ச்சி நடந்தது. இதில் அவர்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துக்கூறும் நல்வாய்ப்பு எனக்கு கிடைத்தது. சுருக்கமாக நான் எடுத்துக் கூறினேன். அந்த நிகழ்ச்சி ஆங்கிலத்திலும் ஜெர்மனி மொழியிலும் நடந்தது. எனவே அந்த நிகழ்ச்சியில் மாநாட்டிற்காக வந்தவர்களுள் மிகவும் குறைவான எண்ணிக்கையில் தான் கலந்து கொண்டனர். தொலைக்காட்சியிலும் மிகக் குறைந்தவர்கள்தான் இதை பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் அவர்களுக்கு இஸ்லாமிய போதனைகள் எடுத்துக் கூறப்பட்டன. அங்கு எனது சொற்பொழிவு சற்று நீண்டதாக இருந்தது. ஆனால் மிகவும் கட்டுப்பாட்டுடன் அவர்கள் அதை செவியேற்றார்கள். ஒருசிலர் அங்கிருந்து எழுந்து சென்றாலும் அவர்கள் காரணங்களைக் குறிப்பிட்டு நாங்கள் முக்கியமாக போக வேண்டிய வேலை இருக்கிறது என்று கூறி, அனுமதி பெற்ற பின் எழுந்து சென்றார்கள்.

ஒரு விருந்தினரிடம் ஏற்பட்ட நல்ல விளைவை நான் இங்கு கூறுகிறேன். அவர் எனது சொற்பொழிவு முடிந்தவுடன் கடிகாரத்தைப் பார்த்தார். அப்போது மிகவும் நீண்ட நேரம் ஆகிவிட்டதை

அவர் உணர்ந்தார். ஆனால் சொற்பொழிவு கேட்பதற்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. நேரம் போனதே தெரியவில்லை என்று கூறினார்.

ஒருவர் அமெரிக்காவிலிருந்து எனக்கு கடிதம் எழுதினார். அவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு கிறித்தவ நண்பருடன் இருந்து சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த நபர் மிகவும் ஆர்வமூட்டக்கூடிய விஷயமாக இருக்கிறதே என்று கூறினார். இன்னும் அவர், போப் கூட இப்படி சொற்பொழிவு ஆற்றியதில்லை. இவ்வளவு நல்ல விஷயங்களை போப் –ஆல் கூற முடியும் என்று கூறினார். இது இறைவனின் அருளாகும். இது இஸ்லாத்திற்குக் கிடைத்த மேன்மையாகும். திருக்குர்ஆனுக்குக் கிடைத்த மேன்மையாகும். அதுவே இங்கு வெளிப்படுகிறது. இதில் எனது சுய முயற்சி ஏதுமில்லை. சொற்பொழிவாளர்களின் முயற்சி ஏதும் இருப்பதில்லை. இது இறைவன் திருக்குர்ஆனில் நிறைத்து வைத்துள்ள ஞானமாகும். இந்த ஞானத்தை நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து பெற்று உலகிற்கு எடுத்துக் கூறினோம். நல்ல உள்ளம் கொண்டவர்கள் இதை ஏற்றுக் கொள்கின்றனர். இறைவனின் இந்த அருட்கொடைகளைப் பார்க்கும் போது நமது உள்ளம் இறைவனின் புகழால் நிரம்பி விடுகிறது.

அஹ்மதி மாணவ மாணவிகளுடன் எனது ஒரு சந்திப்புக் கூட்டம் நடந்தது. அவர்களிடம் நான் நீங்கள் எவ்விதமான தாழ்வு மனப்பான்மைக்கும் ஆளாக வேண்டாம் என்று கூறினேன். திருக்குர்ஆனை வழிகாட்டியாக ஆக்கிக் கொள்ளுங்கள். உங்களது கல்வியின் மைதானத்திலும் ஆய்வுகளிலும் இதை கவனத்தில் கொண்டவாறு பணியாற்றினால் உங்களை யாரும் வெல்ல முடியாது என்று அவர்களுக்கு நான் கூறினேன். இறைவனின் அருளால் இங்கு மாணவ மாணவியர்களின் ஒரு பெரிய எண்ணிக்கை கல்வியில் வளர்ந்து வருகிறது. இந்த மாணவர்களுக்கு இறைவன் இந்த நாட்டில் வந்து கல்வி கற்பதற்கான நல்வாய்ப்பை இறைவன் அவர்களுக்கு வழங்கியமைக்காக இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். இந்த கல்வியின் முன்னேற்றத்தை திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாமிய போதனைகளின் கீழ் வைக்க வேண்டும். இறைவன் இவர்களை ஜமாஅத்திற்கு பயனுள்ளவர்களாக ஆக்குவானாக!

M.T.A. வைப் பற்றி முன்னதாகவே நான் கூறியிருக்க வேண்டும். ஜெர்மனியின் பணியாளர்கள் அல்லும் பகலும் உழைத்து நேரடி ஒளிபரப்பு செய்தார்கள். இடையிடையே தமது ஸ்டூடியோவிலிருந்து சில நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பிக் கொண்டிருந்தனர். அந்த நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பான நிகழ்ச்சிகளாக இருந்தன. இலண்டனிலிருந்தும் சில இளைஞர்கள் உதவிக்காக வந்திருந்தனர். அனைவரும் இணைந்து மாநாட்டின் நிகழ்ச்சிகளை உலகத்திற்கு கொண்டு சேர்த்தனர். இப்போது நான் பயணத்தில் இருப்பதால் கடிதங்களைப் பார்க்கவில்லை. ஆனால் நான் இலண்டன் திரும்பியதும் வழக்கம்போல் கடிதங்களின் குவியல் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். M.T.A.வின் ஊழியர்களையும் அவர்களின் பணிகளையும் பாராட்டிக் கடிதங்கள் எழுதியிருப்பார்கள். இதற்காக இறைவனுக்கு நன்றியுணர்வை அவர்கள் வெளிப்படுத்தியிருப்பார்கள். எனவே நான் இதை முன்கூட்டியே உங்களுக்கு கூறுகிறேன்.

ஜெர்மனி M.T.A.தமது Mobile track ஒன்றை உருவாக்கியுள்ளனர். தகவல் பரிமாற்றத்திற்காகவும் control செய்வதற்காகவும் இது உதவுகிறது. மேலும் இது எடிட்டிங் மற்றும் நிகழ்ச்சி நடப்பதற்கும் உதவுகிறது. இதற்கு முன் மான்ஹேம் என்ற இடத்திலிருந்து தமது எல்லா system களையும் மாநாட்டிற்காக இடமாற்றம் செய்தார்கள். ஒரு அறையில் அதை வடிவமைத்து வந்தனர்.

இப்போது ஒரு பெரிய வண்டியில் அந்த எல்லாவற்றையும் வைத்து விட்டனர். இதை அவர்கள் எடுத்துக் கொண்டு எல்லா இடத்திற்கும் செல்ல முடியும்.

இறை அருளால் ஜெர்மனியின் M.T.A மிகவும் வளர்ந்துள்ளது. வேகமாக வளர்ந்து வருகிறது. இறைவன் இதன் ஊழியர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக! எனது இந்த சுற்றுப் பயணத்தில் ஜெர்மனி ஜமாஅத்தின் ஒரு விஷயத்தை நான் முதன்முறையாகப் பார்க்கிறேன். இவர்கள் நன்கு படித்த வர்க்கத்து மக்கள் மற்றும் அரசியல்வாதிகளோடு நல்லுறவை வளர்த்துள்ளார்கள். ஊடகத்துடனும் தொடர்பை வலுப்படுத்தியுள்ளனர். குத்தாமுல் அஹ்மதிய்யா குறிப்பாகவும், ஜமாஅத் பொதுவாகவும் ஜமாஅத்தின் தூதுச் செய்தியை பிரசுரங்கள் மூலமாக கொண்டு சேர்க்கும் பணியில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்துள்ளது. இறைவன் இவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக!

இந்த நல்லுறவின் விளைவாக என்னுடன் படித்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் பல பட்டதாரிகளும் அரசியல்வாதிகளும் சந்திக்க வந்தனர். அவர்களின் நடத்தையில் மிகவும் மரியாதை தென்பட்டது. இந்தத் தொடர்பின் காரணமாக ஹம்பர்க் என்ற இடத்தில் கௌன்ஸில் அறையில் கிரீன்பார்ட்டி என்ற அரசியல் கட்சியினர் ஒரு நிகழ்ச்சியை நடத்தினர். அதில் இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் சில கருத்துக்களை கூறுவதற்கான சர்ந்தர்ப்பம் கிடைத்தது. பல மதத்தைச் சேர்ந்தவர்களும் பல வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் அதில் பங்கு கொண்டனர். அவர்களின் முன்னிலையில் இஸ்லாத்தின் போதனை எடுத்துக் கூறப்பட்டது. அதே போன்று இப்போது பொதுமக்களின் கவனமும் இஸ்லாமிய போதனைகளின் உண்மைத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதில் அதிக நாட்டம் ஏற்பட்டுள்ளதை நான் உணர்ந்தேன்.

நீங்கள் துண்டு பிரசுரங்கள் மற்றும் இன்னும் பிற வழிமுறைகளில் செய்யும் முயற்சியில் இறைவன் தனது அருளை இறக்குவானாக. மக்களின் உள்ளங்களை திறப்பானாக. ஒருபுறம் இஸ்லாத்திற்கு எதிராக வன்முறையின் அலை எழுகிறது. மறுபுறம் அதே அளவில் போதனைகளின் பால் கவனமும் ஏற்படுகிறது. எனவே ஜெர்மனியின் ஜமாஅத் உறுப்பினர்கள் இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றி காட்டும் விதமாக இந்த நல்லுறவை இன்னும் அதிகமாக வளர்த்துக் கொள்ள வேண்டியது உங்களது பொறுப்பாகும். தப்லீகில் மேற்கொள்கின்ற முயற்சிகளை இன்னும் ஊக்கப்படுத்துங்கள். இதனால் விரைவாக நாம் இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் விளைவுகளை மக்களின் உள்ளங்களில் உருவாவதை பார்க்க வேண்டும். இறைவன் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT KATHEEJA MOSQUE, BERLIN**
**ON 01.07.2011**

Translated by : **Maulavi S. ABDUL QADIR Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**